O.S. No: 46/2017

பெயர்: **ரகுநாதன்**

**வா.சா.2**

09/02/2023

**குறுக்கு விசாரணை**

நான் கும்பகோணம் மாணிக்கம் ஆட்டோ ஸ்பேர் பார்ட்ஸ் கம்பெனியில் கணக்காளராக பணிபுரிந்து வருகிறேன். வாதி சென்பகம் எனக்கு பெரியம்மா முறைவேண்டும். வாதியின் அதிகார பெற்ற முகவர் அவர் எனக்கு தம்பி மனைவி ஆவார். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் தான் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் வாதி வழக்கறிஞர் அலுவலகத்தில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. கணினியாக்கம் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து இன்றைய தேதியில் யாருடைய பெயரில் இருக்கிறது என்று ஆவணங்களை நேரடியாக நான் பார்த்திருக்கிறேன். சுமார் 3 மாதங்களுக்கு முன்பாக ஆவணங்களை பார்த்திருக்கிறேன். நான் பி.காம் பட்டப்படிப்பு படித்துள்ளேன். புல எண் 62/5 சொத்திற்கு சாட்சியமளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் கிராமம் புல எண் 62/5 அடங்கல் பதிவேட்டு நகல் உப்பிலிராஜ் பெயரில் உள்ளது. நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா திருநாகேஸ்வரம் புல எண் 62/5 திருவேங்கடம் மகன் உப்பிலிராஜ் பெயரில் உள்ளது. என் அப்பா பெயர் ஸ்ரீராமன். இந்த வழக்கின் 2 ஆம் பிரதிவாதி திருவேங்கடம் எனக்கு ஒரு வகையில் உறவினர் தான். என் அப்பாவின் கையொப்பம் எனக்கு தெரியும். என் அப்பாவின் அப்பா பெயர் சந்தான கோபால செட்டியார். புல எண் 62/5 இல் ஒரு பகுதி என் தகப்பானருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள கையொப்பம் என் அப்பாவின் கையொப்பம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி திருவேங்கடத்தின் மூதாதையரான நைனார் சாமி பாட்டனார் என்றால் இல்லை. திருவேங்கடத்தின் தாத்தா பெயர் பட்டாபி ராமன். பட்டாபி ராமனுக்கு அண்ணன் முறைதான் நைனார் சாமி என்றும், அதை தெரிந்துக்கொண்டு பொய்யாக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1995 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி என் தகப்பனார் நைனார் சாமிக்கு புல எண் 62/5 இல் ஒரு பகுதியை பதிவு அலுவலகம் மூலம் கிரய சாசனம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதி சென்பகம் மீது வழக்கு தாக்கல் செய்து, அதில் வாதிகளுக்கு ஆதரவாக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு அது

நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். வாதி அதிகாரம் பெற்ற முகவர் பிரதிவாதிகள் தாவா சொத்தை இடஞ்சல் செய்வதாக காவல் நிலையத்தில் எனக்கு தெரிந்து புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2017 ஆம் ஆண்டு பிரதிவாதிகள் மீது வாதி தரப்பில் தாவா சொத்தில் இடஞ்சல் செய்வதாகவோ, மரங்கள் வெட்டியதாகவோ புகார் எதுவும் கொடுத்துள்ளார்களா என்று எனக்கு தெரியாது. புல எண் 62/5 இல் உள்ள சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து என்று ஆவணங்கள் மூலம் தெரிந்துக்கொண்டு, வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.